மலர் - 9 ஏப்ரல் - 1996 இதழ் - 4

# திருமறை ஒளி

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்

இடம் :- மணல் மேடு வீதி, ஈரோடு 638002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்


1. ஆராதனைகளில் இசைக்கருவிகளை பயன்படுத்தலாமா? 1
2. மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர் 10
3. பெண்கள் பகுதி 15
4. சிலுவை வார்த்தை 18
5. புதிய ஏற்பாட்டு ஆராதனை (10) 21
6. நீ ஏன் சந்தேகப்பட்டாய் 26
7. யெகோவா சாட்சி (13) 29
8. நாம் விரும்புவதைப் போதிக்கலாமா? 31

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 APRIL - 1996 ISSUE -4

## "ஆராதனைகளில் இசைக்கருவிகளை பயன்படுத்தலாமா?

சமீபத்தில் ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது, உங்கள் மாத இதழ் சிறப்பாக உள்ளது. ஏனெனில் எல்லாவற்றிற்கும் வேத ஆதாரங்களைக் காட்டுகிறீர்கள். கொஞ்சம் வித்தியாசமான பத்திரிக்கை தான் என்றார். தொடர்ந்து லெந்து நாட்கள், பெரிய வெள்ளி, ஈஸ்டர், கிறிஸ்மஸ் போன்றவற்றிற்கு வேத ஆதாரமில்லையென்பதை ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால், "ஆராதனைகளில் இசைக் கருவிகள்" பயன் படுத்துவதைக் கூட எதிர்க்கிறீர்களே, இது எப்படி நியாயமாகுமென்று அப்படியே இழுத்தார்.

இந்நல்ல நண்பரைப் போன்று, அநேகருக்கு எங்களின் இக்கொள்கை சம்பந்தமான நெருடல் இருக்குமென்று நம்புகிறேன். இயேசுக் கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த (அப்.20:28) ஒரே சபையாகிய, கிறிஸ்துவின் சபையாரின் ஆராதனைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறும் இன்னும் அநேகருக்குக் கூட, உலகெங் குமுள்ள ஏனைய கிறிஸ்தவ சமுதாயத்தால் விமரிசையாகப் பயன்படுத் தப்படும் இசைக் கருவிகளை இவர்கள் ஏன் பயன்படுத்தவில்லை யென்ற கேள்வி பலமாக எழும்பும்.

பெரும்பான்மையோர் என்ன சொல்லுகிறார்கள் அல்லது செய்கி றார்கள் என்பதை அடிப்படையாக வைத்து தேவன் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தைத் தீர்மானிப்பது, உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாக இருந்தாலும் தேவனுடைய பார்வையில் அது

நீதியாகாது. சர்வ வல்லவரின் காரியத்தில் செம்மையாக இருக்க விரும்பும் ஒருவன், அவர் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு காரியத்திற்கும், அவருடைய அநந்த ஞானத்தால் அருளப்பட்ட - பரிசுத்த ஆவியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட வேத வசனங்கள் என்ன சொல்லுகிறதென்று அலசிப்பார்ப்பதே விவேகமானது, தேவனுடைய பார்வையில் பிரீதியானது.

ஆகவே, இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் விஷயத்தில், நம்முடைய நிலையைத் தற்பரிசுத்தம் செய்து பார்க்க, நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவா. 12: 48) வல்லமை படைத்த வேத வசனங்களுக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன், இதுகாறும், நாம் மேற்கொண்ட நிலை எதுவாக இருந்தாலும், இப்பொழுது இப்பிரச்னையைத் திறந்த மனதோடு அணுகுவது நன்மை பயக்கும்.

## பழைய ஏற்பாட்டுப் போதனை என்ன?

வேத வசனங்களுக்குள்ளாகச் செல்வோம் என்று சொன்ன மாத்திரத்தில், சற்றும் தாமதியாமல், பழைய ஏற்பாட்டில் இசைக்கருவிகளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையா? தாவீது இசைக்கருவிகளைப் பயன்படுத்தி தேவனை மகிமைப்படுத்தினான் என்று சங்கீத புத்தகத்தில் இல்லையா? என்று சற்று ஆவேசம் கலந்த குரலில் கேட்பது புரிகிறது. அன்பரே, உண்மைதான். இல்லையென்று மறுக்கவில்லை. அப்படியானால் நாம் ஏன் உபயோகிக்கக் கூடாது? சங்கீதப் புத்தகம் வேதாகமத்தின் ஒரு பகுதி இல்லையா? என்று வினவுவதும் தெரிகிறது. உங்களின் இக்கேள்விகளில் நியாயம் இல்லாமலில்லை. இருப்பினும் இதைக் குறித்து இன்னும் கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம்.

சரி, இவ்வளவு கேள்விகளை அடுக்கினீர்கள் அல்லவா? நான் ஒரு எதிர்க் கேள்வி கேட்கிறேன். தாவீது, மிருக பலி செலுத்தினான் என்று வேதாகமம் கூறுகிறது. இசைக் கருவிக்கு தாவீதை முன்னுதாரணம் காட்டும் நாம், மிருக பலி செலுத்தத் தயாரா? யாராவது ஒருவன் ஒரு பழுதற்ற, ஒரு வயது ஆட்டுக்குட்டியைக் கொண்டு வந்து நான் இதை தேவனுக்குப் பலியாகச் செலுத்த விரும்புகிறேன் என்று ஆராதனையில் கேட்டால் நாம் என்ன சொல்லுவோம்? வேண்டாம் நண்பரே, தேவன் உங்களின் இந்தப் பலியை ஏற்றுக் கொள்ள மாட்டார் என்போம். ஏன் என்று அந்நபர் மீண்டும் கேட்டால், "தாவீது, மிருக பலி அங்கீகரிக்கப்பட்ட காலத்தில், - நியாயப் பிரமாணத்தின் காலத்தில் வாழ்ந்தார். நாம் அப்படியல்ல" என்று சொல்லுவோம். அப்படித்தானே.

இன்றைக்கு ஒருவன் நாலைந்து மனைவிகளைக் கட்டிக் கொண்டு, நான் தேவனுக்குப் பிரியமாய் நடக்கிறேன் என்று பீற்றிக் கொண்டால் நாம் என்ன சொல்லுவோம். இல்லை, இல்லை, "தேவன் நிச்சயமாய் உங்களில் பிரியப்படமாட்டார்" என்று அடித்துச் சொல்லுவோம். பல மனைவிகளைக் கட்டிக் கொண்ட தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசனாக வாழவில்லையா" என்று அவன் திருப்பிக் கேட்டால் நாம் என்ன சொல்லுவோம்? "பலதார மணம்" சகித்துக் கொள்ளப்பட்ட நியாயப் பிரமாணத்தின் காலத்தில் அவர் வாழ்ந்தார். ஆனால் இது கிருபையின் காலம் என்று விளக்கம் கொடுப்போம்.

நியாயப் பிரமாணத்தின் காலத்தில் நடந்தவைகளைத் தாங்களும் செய்து, அவைகளை நியாயப்படுத்த விரும்பிய கலாத்தியா நாட்டு சபையாரை பவுலடியார் எப்படிக் கடிந்து கொண்டார் தெரியுமா? "**நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்**" (கலாத். 5 : 4). இதை வாசிக்கும் நாம் யாரும் கிருபையினின்று விழுந்துபோக விரும்பமாட்டோம். அப்படியானால், நியாயப் பிரமாணத்தையும், நியாயப் பிரமாணத்தின் காலத்தில் நடந்தவற்றையும் வைத்து, நம்முடைய செயலை நியாயப்படுத்த கூடாதுதானே.

இன்றைக்கு இசைக் கருவிகளை உபயோகிப்பதற்கு, தாவீதைத் தாராளமாகப் பயன்படுத்தும் நண்பரே, இங்கே ஒன்றைக் கவனியுங்கள். தாவீது இசைக் கருவிகளைப் பயன்படுத்தியதைக் குறித்து தேவன் என்ன சொன்னார் தெரியுமா? வேத வசனம் என்ன சொல்லுகிறது தெரியுமா? "**. . . . தம்புரை வாசித்துப்பாடி, தாவீதைப் போல் கீத வாத்தியங்களைத் தங்களுக்கு உண்டு பண்ணுகிறவர்களுக்கு ஐயோ**" (ஆமோ 6 : 1-6). ஒரு வேளை, தாவீது, என்ன நினைத்து அவைகளை உபயோகித்தாலும், தேவன் என்ன சொல்லுகிறார் என்பதைப் பார்த்தீர்களா? இசைக் கருவிகளைக் குறித்து, தேவனுடைய பதில் என்ன என்பதற்கு இதைவிடச் சிறந்த ஆதாரம் வேண்டுமா? நண்பரே! இசைக் கருவிகள் பயன்படுத்துவதற்கு ஆதாரமாக தாவீது, தாவீது என்று சொல்வதை இத்தோடு நிறுத்திக் கொள்வது நல்லது. ஏனெனில் நம் ஒருவருக்கும் "ஐயோ" வேண்டவே வேண்டாம்.

## புதிய ஏற்பாட்டுப் போதனை என்ன?

புதிய ஏற்பாட்டின் முதல் பக்கத்திலிருந்து இறுதிப்பக்கத்தின் கடைசி வசனம் வரை உன்னிப்பாக வாசித்துப் பார்த்தாலும், ஆராதனையில்

இசைக் கருவிகள் பயன்படுத்தியதற்கான எந்தவொரு தடயமும் இல்லை. இல்லவே இல்லை. இயேசுக் கிறிஸ்து இதைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. அப்போஸ்தலர்கள் இவைகளை அனுமதித்தார்களென்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதைப் பற்றி எங்குமே கட்டளை கொடுக்கவில்லை. இயேசுக் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தால் கட்டப்பட்ட எந்தவொரு ஆதித் திருச்சபையும் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை. மொத்தத்தில், பரிசுத்த எழுத்துக்களில் இதற்கான ஆதாரம் எங்குமே இல்லை என்ற என் கருத்தை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

வசன ஆதாரம் இல்லையென்பதை ஒத்துக் கொள்வீர்களானால், உங்களுக்கு ஒன்றை நான் நினைப்பூட்ட ஆசைப்படுகிறேன். அது என்ன தெரியுமா? **வேத வசனத்தோடு எதையும் கூட்டவும் குறைக்கவும் கூடாது என்ற "தேவ எச்சரிப்பு" தான் அது.** வேதாகமத்தில் முதல் எழுத்தாளனாகிய மோசே இதைப்பற்றி சொல்வதைக் கேளுங்கள். **". . . . நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்"** (உபா. 4 : 2), வேதாகமத்தின் மத்தியிலுள்ள புத்தகமாகிய நீதிமொழிகளில் ஞானியின் மூலமாக தேவன் இவ்விதமாகப் பேசுகிறார். **"அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்து கொள்வார், நீ பொய்யனாவாய்"**. (நீதி. 30:6). மீண்டும் தேவன், மனிதனுக்கான தன்னுடைய வெளிப்பாடுகளையெல்லாம் கொடுத்துவிட்டு, அவைகளை நிறைவு செய்வதற்கு முன் எச்சரித்து முடிப்பதை ஏன் கவனிக்க மறுக்கிறீர்கள். **". . . ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார். (வெளி. 22 : 18, 19).**

வேதவசனத்தோடு கூட்டுவது சாபத்தை வருவிக்கிறது. ஆனால், இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதோ, "கூட்டுதல்" என்ற பாவத்திற்கு அடிகோலுகிறது. வசனத்தில் இல்லாததைச் செய்வது, தேவ அதிகாரத்திற்கு அடங்காத ஒரு நிலையைத் தோற்றுவிக்கிறது. கொலோசே பட்டணத்தாருக்குப் பவுலடியார் சொல்லும் போது, **"வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின்**

நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் (கொலோ. 3 : 17). இங்கே இரண்டு காரியங்கள் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1. வார்த்தை 2. கிரியை. அதாவது பேச்சு, செயல். இந்த இரண்டும் இயேசுவின் நாமத்தால் செய்யப்பட வேண்டும். 'நாமம்' என்றால் என்ன? "அதிகாரம்". அதாவது, இயேசுவின் அதிகாரம். இசைக்கருவிகள் பயன் படுத்துவது ஒரு கிரியை - இந்தச் செயலுக்கு இயேசுவானவரால் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வேத எழுத்துக்களில் எங்கே அனுமதி உள்ளது? இல்லையென்றால், இது "கூட்டு கின்ற" ஒரு செயலா இல்லையா? தயவு செய்து சிந்தியுங்கள்.

ஒரு வேளை வசன ஆதாரமில்லாமல் செய்தால் என்ன என்று நீங்கள் கேட்கலாம். ஜனங்கள் இப்படியெல்லாம் துணிகரமாகச் செயல் படுவார்கள் என்பதை பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாக எதிர் பார்த்தார். ஆகவே தான் II யோவான் 9-ம் வசனத்தை வெளிப்படுத்திக் கொடுத்தார். " கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத் திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல . . . ". ஒருவேளை இசைக்கருவிகளை உபயோகப்படுத்தி தேவனை ஆராதிக்கும் நாம், தாவீதைப்போல அவருக்காகச் செய்கிறேன் என்று எண்ணினாலும், தேவன் நம்மை அவருடையவர்களாக ஏற்றுக் கொள்வது இல்லை. இல்லவேயில்லை.

அப்போஸ்தலன் பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பேசும் பொழுது, "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்க ளுக்கு மறைத்து வைக்கவில்லை"யென்று சொல்கிறார். (அப். 20. 20). ஆனால் வெளியாக்கப்பட்டவைகளில் இசைக் கருவியைப் பற்றி ஒன்றும் இல்லை. அப்படியானால் அதன் பொருள், அது பிரயோஜனம் இல்லை என்பதுதானே. பேதுரு, தமது இரண்டாம் நிருபத்தில் இவ்வித மாகச் சொல்கிறார் " . . . ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமை நமக்குத் தந்து" என்று ( II பேது. 1 : 3). "யாவற்றையும் என்று சொல்லியிருந்தாலும், இதில் "இசைக்கருவி" வரவில்லை. அதற்கு என்ன தான் அர்த்தம். "ஜீவனுக்கும், தேவபக்திக்கும் "இசைக்கருவி தேவையில்லையென்பது தானே. இன்னுமா விளங்கவில்லை? விளங்கவில்லையா அல்லது எதிர்த்து நிற்கிறீர்களா?

## மாற்றிச் செய்வதால் ஏற்படும் அபாயம் என்ன?

நாங்கள் வேத வசனத்தோடு கூட்டுவதுமில்லை, குறைப்பதுமில்லை, எதிர்த்து நிற்பதும் இல்லை. சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற் காகக் கொஞ்சம் மாற்றிச் செய்கிறோம். அவ்வளவு தான். இதிலென்ன தவறு உள்ளது என்று கேட்கக்கூடும்.

இன்னும் நிறையக் கேளுங்கள் சொல்கிறேன். ஆரோனின் குமார ராகிய நாதாபும், அபியுவும், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் கொண்டு வந்தார்கள் என்பதையும், அதன் விளைவாக அவர்கள் இருவரும் கர்த்த ருடைய சந்நிதியிலே கர்த்தரால் "கொல்லப்பட்டார்கள்" என்பதையும் நாமறிவோம். (லேவி 10:1,2) இவர்களிருவரும் செய்த தவறு என்ன? தூபங்காட்ட "அக்கினி" தேவைதானே. தீயிலே நல்ல தீ என்று உள்ளதா? எந்த தீயில் தூபவர்க்கத்தைப் போட்டாலும் அது தன் வேலையைச் செய்யுமே. பின்னே, ஏன் கொல்லப்பட்டார்கள்? தவறு எங்கே நடந்தது என்று தெரிகிறதா? தேவன் சொன்னது ஒன்று, இவர்கள் செய்தது ஒன்று. ஆம் கர்த்தர் கட்டளையிட்ட அக்கி னிவேறே, இவர்கள் கொண்டு வந்த அக்கினி வேறே. ஒரு வேளை கொண்டு வந்தது "நல்ல அக்கினி"யாகக் கூட இருக்கலாம். ஆனால் தேவன் அதை முற்றிலும் நிராகரித்ததோடல்லாமல், தண்டனையும் கொடுத்தார்.

வேறொரு சம்பவத்தையும் நினைவுபடுத்துகிறேன். ஒரு சமயம் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை தாவீதும் அவனோடிருந்த வர்களும் புது இரதத்தில் ஏற்றி ஆடிப்பாடி கொண்டு சென்றார். கீதோனின் களமட்டும் வந்தபோது மாடுகள் இடறினபடியால் பெட்டி சாய்ந்தது. ஐயோ கர்த்தருடைய பெட்டி சாய்கிறதே, அது விழுந்து விடுமே என்று பயந்த ஊசா தன் கையை பெட்டியண்டைக்கு நீட்டினான். தேவன் மீதிருந்த பக்தியினாலே, உடன்படிக்கைப் பெட்டியின் மீதிருந்த மதிப்பினாலே தன்கையை நீட்டினான். ஆனால் அவனது துணிகரத்தைக் கண்ட தேவன் அவனை அடித்துக் கொன்றார் (1 நாளா 13:10)

என்ன காரணம்? செய்த தவறென்ன? ஆசாரியர்கள் மாத்திரமே உடன்படிக்கைப் பெட்டியைத் தொடவேண்டும். ஆனால் ஊசாவோ ஆசாரியர் அல்ல. கீழ்ப்படியாமைக்கு அவன் கொடுத்தவிலை "உயிர்". தவறு என்ன மனநிலையோடு செய்யப்படுகிறது என்று தேவன் கவனிப்பதில்லை. மாறாக செய்யப்படும் செயல் தன்னுடைய கட்ட ளைப்படி நடக்கிறதா இல்லையா என்பதில் குறியாக இருக்கிறார். தேவகட்டளைக்கு நாம் என்ன மரியாதை கொடுத்துக் கொண்டுள்ளோம்? அவருடைய கட்டளையை மீறுகிறவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை தாங்க முடியாததாயிருக்குமென்பதைத்தான் எபிரேய ஆசிரியர் இவ்விதம் குறிப்பிடுகிறார். "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே. (எபி.10.31)

## எப்படித்தான் பாட வேண்டும்?

ஜீவனுக்கும், தேவபக்திக்கும் தேவையான எல்லாவற்றையும் வெளிப்படுத்தின தேவன், எப்படிப் பாட வேண்டுமென்றும் சொல்லியுள்ளார். பவுலடியார் எபேசுவில் இருந்த பரிசுத்தவான்களுக்கு இவ்விதமாகச் சொல்கிறார். "*சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம் பண்ணுங்கள்*" (எபே. 5.19) எபிரேய ஆசிரியர், ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம்." என்கிறார்.(எபி.13:15). கொலோசெயரில் அதே பவுல் இவ்விதம் கூறுகிறார். " . . . *சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லி கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடுங்கள்*" (3:16).

இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடுங்கள் என்றும், உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள் என்றும் உள்ளதை நாம் கவனிப்பது அவசியம். ஆங்கில வேதகாமம் இன்றும் கொஞ்சம் தெளிவாகச் சொல்கிறது. "Making Melody (Music) in your heart unto the Lord" என்றுள்ளது. இசை (melody) எங்கே ஏற்படுத்த வேண்டும்? "இருதயத்தில்". இசைக்கருவிகளைக் கொண்டு இசை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லவில்லை.

"இசை" (melody)யை இருதயத்திலிருந்தும் உண்டாக்கமுடியும். இசைக் கருவிகளைக் கொண்டும் உண்டாக்க முடியும். இருதயத்திலிருந்து உண்டாக்கப்படும் இசை தேவனால் படைக்கப்பட்ட "குரல் வளையத்திலிருந்து" வருகிறது. கருவியால் உண்டாகும் "இசை மனித படைப்பிலிருந்து வருகிறது. இப்பொழுது சொல்லுங்கள் எந்தப்படைப்பு சிறந்தது? தேவனின் படைப்பு சிறந்ததா? மனிதனின் படைப்பு சிறந்ததா?

எது சிறந்தது என்பது ஒருபுறமிருக்கட்டும். 'இசை' எங்கிருந்து வரவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. தேவன் எதை விரும்புவார்? வேத வசனம் எதை அனுமதிக்கிறது? உணர்வும், உயிரும் அற்ற இசைக்கருவிகளின் சத்தத்தை தேவன் ஏற்றுக் கொள்வாரா? அல்லது உணர்வும், உயிரும் உள்ள தன்னால் படைக்கப்பட்ட 'குரல் நாளத்திலிருந்து' வரும் சத்தத்தை அங்கீகரிப்பாரா? எந்த முடிவையும் உங்கள் மீது

திணிப்பது என் நோக்கமல்ல. நீங்களே ஜெபித்து, வேத வசனங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஒரு நல்ல தீர்மானத்திற்கு வாருங்கள்.

## இசைக்கருவிகள் கூடாது என்று எங்கே சொல்கிறது?

மேற்சொன்ன எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள மனமில்லாத இன்னும் சிலர் கேட்கும் கேள்வி " இசைக் கருவிகளை உபயோகிக்க வேண்டாமென்று வேதம் எங்காவது சொல்லுகிறதா? என்பது தன்னுடைய தவறை நியாயப்படுத்தும் கடைசி முயற்சியாகத்தான் பெரும்பாலும் இக்கேள்வி கேட்கப்படும்.

சரி, அதற்கும் வருகிறேன். நோவாவின் நாட்களில் ஜனங்களின் இருதயம் நித்தமும் பொல்லாததாயிருக்கிறதென்று தேவன் கண்டு, உலகத்தை அழிக்க தீர்மானித்த பொழுது மரத்தால் பேழையைக் கட்டும்படி சொன்னார். அத்தோடு நிறுத்தியிருந்தால் நோவா என்ன செய்திருப்பார். பேழையைக் கட்டுவதற்குத் தோதான மரம் எது என்று அவனுக்குப்படுகிறதோ அதைத் தெரிந்தெடுத்து அதிலே கட்டியிருப்பான். ஆனால், நண்பர்களே மரத்தால் பேழையைக் கட்டும்படியாகச் சொன்ன தேவன், இன்ன மரத்தால் கட்டு என்றும் கட்டளையிட்டார்.

ஆனால் தேக்கு மரத்தாலோ, ஈட்டி மரத்தாலோ கட்ட வேண்டாமென்று தேவன் எங்கும் கட்டளை கொடுக்கவில்லையென்பதை கவனிப்பது அவசியம். இன்னின்ன மரத்தால் பேழையைக் கட்டக் கூடாது என்று பட்டியலிட்டுக் காட்டாவிட்டாலும்,"கொப்பேர்" மரத்தால் கட்டு என்று சொல்லும் போதே மற்ற மரங்களால் கட்டக் கூடாது என்பது தானே அதன் பொருள். இதைப் புரிந்து கொள்ள குறைந்தபட்ச அறிவே ஒருவனுக்கு போதும்.

அப்படியானால் "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள்" (எ.பே 5:19) என்றால் அதன் பொருள் என்ன? என்ன நண்பரே இன்னுமா விளங்கவில்லை, "இசையை" இருதயத்தில் உண்டுபண்ணு என்றால் இசையை கருவிகளால், உண்டு பண்ணாதே என்பது தானே அதன் பொருள்.

வசனத்தில் சொல்லியிருப்பதை மாத்திரம் செய்வதில் நமக்கென்ன பிரச்சனை? யோவன் 12:48 ல் " நான் சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்குமென்று சொல்லி

யுள்ளாரே". ஒருவேளை வசனத்தில் சொல்லியிருப்பதற்கு மிஞ்சி நாம் செய்தால், நியாயத்தீர்ப்பை எப்படி எதிர்கொள்வோம்? வசனம் தான் அளவுகோல் எனில், அந்த அளவு கோலால் நாம் அளக்கப்படும்போது தவறு நேருமே. அங்கே போய்ப் பார்க்கலாம் என்கிறீர்களா? ஐயோ, அங்கே மனதிரும்ப வாய்ப்பில்லை. நமதாண்டவர் அன்பும் இரக்கமும் உள்ளவராக அல்ல நீதியுள்ள நியாயாதிபதியாய் அப்பொழுது வீற்றிருப்பார். (II தீ முத் 4:8)

ஒருவேளை, 'நரகமே' சென்றாலும் பரவாயில்லையென்று நீங்கள் தீர்மானித்தால் அது வேறு விஷயம். ஆனால் இந்தப் பாவத்துக்காக-ஆம் கூட்டுதல் என்ற பாவத்திற்காக நித்தியத்தை, நரக ஆக்கினையில் கழிப்பது நியாயமா? தேவனை உண்மையாக நேசிக்கும் ஒருவன் மேற்கொள்ளும் முடிவா இது? வேண்டாம். நித்தியத்தை, மகிமையில் கழிக்கும்படியான நல்ல முடிவை எடுங்கள். ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவதை இப்பொழுதே நிறுத்துங்கள்.

EZS ராஜ நாயகம்

## உங்கள் கவனத்திற்கு

"அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வரம்" மற்றும் "எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா?" என்ற தலைப்புகளில் 38 பக்கங்கள் கொண்ட ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஊழியர்கள், வேத மாணவர்கள், விசுவாசிகள் ஆகிய அனைவருக்கும் மிகுந்த பயனுள்ளதாய் இருக்கும்.

ஆப்செட் (off-set) முறையில் அச்சிடப்பட்டு நவீன முறையில் பைண்டிங் மற்றும் லேமினேசன் (Lamination) செய்யப்பட்டுள்ளது. புத்தகம் முற்றிலும் இலவசம்.

தபால் செலவுக்கு மட்டும் நீங்கள் பணம் அனுப்பிக் கொடுத்தால் புத்தகம் உங்களுக்கு உடனே அனுப்பிக் கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 10 | புத்தகத்திற்கு | ரூ. 9.00 |
| 25 | புத்தகத்திற்கு | ரூ. 21.25 |
| 50 | புத்தகத்திற்கு | ரூ. 40.00 |

M.O. செய்ய வேண்டிய முகவரி
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
**C/o. கிறிஸ்துவின் சபை**
தாராபுரம் ரோடு காங்கயம் – 638 701.

# மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர்

மனமாற்றம் அல்லது மனந்திரும்புதல் என்பது ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சுவிசேஷத்தின் படியாக, தேவனை ஒருவர் விசுவாசித்து, தனது பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, தன் பாவங்கள் கழுவப்பட திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும் போது மனந்திரும்புதல் ஏற்படுகிறது. அப்போஸ்தலர் நடபடி புத்தகத்தில் குறைந்தது பதினொன்று மனமாற்றங்களைப் பற்றிய விவரங்களை நாம் காண முடியும். அவை அனைத்தையும் நீங்கள் படித்துப் பார்த்தால், அந்த மக்கள் அனைவரும் கர்த்தருக்குக் கீழ்படிவதில் ஒரே காரியத்தையே செய்தார்கள் எனப் புரியும். ஆனால் இவை அனைத்தையும் பரிசுத்த ஆவியானவருடைய பங்கு என்ன?

என்னோடு யோவான் 3ம் அதிகாரத்திற்கு வாருங்கள். அதைப்படித்து, இயேசுவால் கற்பிக்கப்பட்ட புதிய பிறப்பு பற்றி நாம் கொஞ்சம் சிந்திப்போம். வசனம் கூறுகிறது. "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து. ரபீ நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிபட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனிதன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தாரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலுருந்து

வருகிறதென்றும், இன்ன இடத்திறகுப் போகிறது என்றும், உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். இயேசு அவனை நோக்கி, நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன். நாங்கள் அறிந்திருக்கி றதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம், நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்க வில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்தில் இருக்கிறவருமான மனித குமாரனேயல்லாமல் பரலோ கத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3: 1-13)

இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்கும் இடையிலே நடைபெற்ற உரையாடலை தயவுசெய்து கவனித்துப் பாருங்கள். இங்கே ஒரு மனிதன் இருந்தான்; அவன் பரிசேயன், மிகவும் மதப்பற்றுள்ளவன். ஆனால் இயேசுவை விசுவாசித்த மனிதன். யூதர்களுக்குப் பயந்தும், மற்றமக்கள் என்ன சொல்லுவார்களோ என்றும் கருதி, இயேசுவை இரவில் வந்து சந்திக்கிறான். இரு வேறு சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு நடைபெற்ற காரியம் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவுக்காக நிக்கோதேமு பரிந்து பேசுகிற வேளையிலும், மற்றொரு முறை இயேசுவை அடக்கம் செய்ய அவன் வெள்ளைப் போலமும், கரியபோ ளமும் கொண்டுவர, இயேசுவை சுகந்த வர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக்கட்டிய வேள்ளையிலும் இவ்வாறு நடந்தது. ஆனால் நிக்கொதேமு இயேசுவின் பேரில் தனக்குள்ள விசுவாசத்தை அறிவிக்கும் விதமாக "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக் கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான்"

வசனம் தொடரும் போது, இயேசு அவனுக்குப் பதிலளித்து தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒருவன் பிரவேசிக்க வேண்டுமானால் அவன் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று கூறினார். இராஜ்யம் அல்லது சபை இன்னும் நிறுவப்படாமலிருந்தது. ஆனால் விரைவில் அது வரவிருந்தது. அந்த ராஜ்யம் அல்லது சபையில் ஒருவன் பிரவே சிக்க ஆவிக்குரிய ஒரு பிறப்பே அவனுக்குள்ள ஒரே வழி.

எதார்த்தமாக, சரீரபூர்வமான பிறப்பைப் பற்றி கிறிஸ்து கூறிக் கொண்டிருப்பதாக நிக்கொதேமு நினைத்தான். எனவே தான் முதிர்வ யதில் ஒருவன் மீண்டுமாக எப்படி பிறக்க இயலும் எனக் கேட்டான்.

பின்னர், தாம் எப்படிப்பட்ட பிறப்பைப் பற்றிக் கூறிக் கொண்டி ருந்தார் என்பதை இயேசு அவனுக்கு விளக்குகிறார். சரீரத்தில் பிறப்பதைப் பற்றி அவர் குறிப்பிடவில்லை; ஏனெனில் மாம்ச சரீரத்தால் சபை அல்லது ராஜ்யம் கட்டப்படுகிறது அல்ல. ஒரு ஆவிக் குரிய பிறப்பை மனதில் வைத்து இயேசு அவ்வாறு கூறினார். இந்த ஆவிக்குரிய பிறப்பு, ஒரு சரீர, செயல் மூலமாக, அதாவது தண்ணீரில் பிறப்பதால், ஏற்படுகிறது. தண்ணீரைக் கொண்டு கீழ்ப்படியச் சொல்லும் ஒரே ஒரு செயல் மட்டுமே சுவிசேஷத்தில் காணப்படுகிறது. அது திருமுழுக்கு ஆகும். நிறைய தண்ணீர் இருந்த இடத்தில் யோவான் திருமுழுக்குக் கொடுத்ததாக நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (யோவான் 3:23) கிறிஸ்து தண்ணீரில் திருமுழுக்குப் பெற்றார் (மத்தேயு 3:13-17) எழுந்து, பாவங்கள் கழுவப்பட திருமுழுக்குப் பெற வேண்டுமென சவுலுக்குச் சொல்லப்பட்டது.(அப் 22:16) கிறிஸ்துவுள்ளாக நாம் திருமு முக்குப் பெறுவதாக பவுல் கூறினார் (ரோமர் 6:3, கிறிஸ்துவுக்குள் நாம் புதிய சிருஷ்டியாக இருக்கிறோம். (2 கொரி 5:17) இதுவே தண்ணீரில் பிறப்பது என்பதின் பொருளாகும்.

அடுத்ததாக, இயேசுவின் மனதில் உள்ள பிறப்பில் ஆவியும் சம்பந் தப்பட்டுள்ளது. அவர் கூறினார். "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியி னாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்" (யோவான் 3:5) நாம் பார்த்தபடி, தண்ணீரில் பிறப்பது திருமுழுக்கைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடுவதாகும். ஆனால் இந்த எல்லா காரியங்களிலும் ஆவியானவரின் பங்கு என் உண்மையில், "தண்ணீராலும் ஆவியாலும் பிறப்பது என்பது ஒருங்கிணைந்த செயலாகும். ஒன்றை விட்டு விட்டு மற்றதை நீங்கள் செய்ய முடியாது. இங்கே ஆவியின் ஈடுபாட்டைப் பற்றி அறி நாம் 1 பேதுரு 1: 22:23 ஆகிய வசனங்களுக்குச் செல்வோம் அங்கே பேதுரு கிறிஸ்தவர் களிடம் பேசுவதை நாம் பார்க்கிறோம். " ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களா யிருக்கிற படியால், சுத்த இருதயத்தோட ஒருவருக்கொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" எனவே, ஒருவர் மீண்டும் பிறப்பது என்றால் அழிவுள்ள வித்தினால் அல்ல, அதாவது சரீர பிறப்பால் அல்ல, மாறாக அழிவில்லாத வித்தாகிய தேவ வசனத்தால் பிறக்க வேண்டும் எனப்பொருள். இப்போது, அந்த வசனத்தைக் கொடுத்தது யார்? சந்தேகமின்றி, ஆவியானவர் தான்

கொடுத்தார். கிறிஸ்து சொன்னார்." ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது, நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது"(யோவான் 6:63) பின்னர் நற்செய்தியாகிய வசனம், அதாவது சத்தியம், உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்று கிறிஸ்து கட்டளையிட்டார். (மாற்கு 16.15) எனவே, ஒருவன் அந்த வார்த்தையைக் கேட்டு விசுவாசியாக மாறும்போது (ரோமர் 10:17) வசனத்தின்படி நடந்து அதற்குக் கீழ்படியும் போது பின் கர்த்தர் அவனை இரட்சிக்கிறார். கிறிஸ்து கூறினார், " விசுவாசமுள்ளவனாகி ஞான,ஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் , விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் "( மாற்கு 16:16)

தண்ணீராலும் ஆவியாலும் பிறப்பது என்றால் பின் என்ன அர்த்தம்? வசனத்தின் வழியாக ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்கவும், அவனுடைய பாவங்களுக்காக ஆக மனஸ்தாபப்படவும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்யவும், திருமுழுக்குத் தண்ணீரிலே கர்த்தரோடு அடக்கம் செய்யப்படவும், ஆவியானவர் அவனை வழிநடத்துகிறார் என்பதே அதின் எளிய பொருள் ஆகும். அடுத்து, இவை மூலமாக ஒருவன் தண்ணீராலும் ஆவியாலும் பிறக்கிறான், அல்லது நற்செய்திக்குக் கீழ்ப்படிகிறான், அல்லது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறான், அதாவது வார்த்தை வழியாக ஆவியானவர் அவனை அவ்வாறு செய்யத் தூண்டுகிறார். எனவே தண்ணீரும் ஆவியும் இங்கே சம்பந்தப்பட்டுள்ளன. அப்படியானால் ஆவியானவர் ஒருவனை அற்புதமாக இரட்சிப்புக்கு வழி நடத்துகிறார் என அர்த்தமா? அல்லது வசனத்திற்கு அப்பால் வசனத்திற்கு வெளியே, ஒருவன் தண்ணீராலும் ஆவியாலும் பிறக்கிறானா? இல்லை என்பதே இதற்குப் பதில். இங்கே இரட்சிப்பு எந்த ஒரு அற்புத செயலாலும் நடைபெறுவதில்லை. ஆனால் தேவனுடைய ஆவிக்குரிய சட்டத்தின்படி ஒருவர் கர்த்தருடைய உபதேசத்துக்குக் கீழ்படியும் போது அவர் இரட்சிக்கப்படுகிறார். அதற்கு மாறாக அந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் இரட்சிப்படைய இயலாது.

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என வசனம் தொடர்ந்து கூறுகிறது. அதாவது மாம்சத்தில் பிறப்பது சம்பந்தமான சட்டம் இருக்கிறது, ஆவியில் பிறப்பது சந்பந்தமாகவும் ஒரு சட்டம் உண்டு. அவை இரண்டுமே பிறப்பதைப் பற்றியதாக இருப்பினும் ஒன்று சரீரத்திற்குரியது, அடுத்தது ஆவிக்குரியது. இவை அனைத்தும் எவ்வாறு புரிந்து கொள்வதில்லை என்பதை படம் பிடித்து அவர் காட்டிய போதிலும், அவை நடைபெற்

றுக்கொண்டிருக்கின்றன. நாம் காற்றை காண முடியாது. ஆனால் காற்றின் செயலைக் காண முடியும். அது போலவே ஒரு தனிப்பட்ட மனிதனுடைய இருதயத்தில் ஆவியின் வார்த்தை கிரியை செய்வதையும், வசனத்தைதக் கேட்கும் போது விசுவாசத்தை எப்படி உண்டாக்குகிறது என்பது போன்றவற்றையும் நாம் கான முடியாது. ஆனால் அதின் விளைவுகளை நாம் காண முடியும். அதாவது, ஒருவன் முன்வந்து கர்த் தருக்குக் கீழ்ப்படியும் போது இரட்சிக்கப்படுகிறான். கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் சபைக்குள் - பிரவேசிக்கிறான். நற்கனிகளைக் கொடுக்கத் தொடங்குகிறான். இது தான் புதிய பிறப்பு. மனமாற்றத்தில் ஆவியானவரின் பங்கு இதுதான்.

மாம்சப் பிறப்பைப் பொறுத்தவரை, அவை அனைத்தும் ஒரே மாதிரியான பிறப்புகள். ஆவிக்குரிய பிறப்பிற்கும் இது பொருந்தும். ஒருவனை ஒரு விதமாகவும், மற்றொருவனை வேறு விதமாகவும் தேவன் இரட்சிப்பதில்லை. எல்லாரையும் ஒரே மாதிரியாகவே இரட் சிக்கிறார். அதாவது, சுவிசேஷத்தில் நிர்ணயிக்கப்பட்ட சட்டத்தின்ப டியாக இரட்சிக்கிறார்.

நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? இல்லையென்றால் நீங்கள் பிறப்பீர்கள் என நாங்கள் நம்புகிறோம். கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள், திருமுழுக்குத் தண்ணீரில் அடக்கம் செய்யப்படுங்கள், அப்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையிலே சேர்த்துக் கொள்வார் ( அப் 2:38:47)

J.C.சோட்

## அறிவிப்பு

கர்த்தருக்குச் சித்தமானால் "விசுவாசத்தின் அடிப்படை" என்ற புதிய கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் ஆரம்பமாக உள்ளது.

கட்டுரைகள் சிறப்புடனும், அநேகருக்குப் பிரயோஜனமுண்டாகிற அளவிலும் வெளி வர ஜெபியுங்கள்.

பெண்கள் பகுதி

# "தேவையிலிருப்போருக்கு உதவினாள்

குடும்பத்தில் உள்ள பெண்கள் வழக்கமாக சரீரத்தின் தேவைகளைக் கவனிப்பதிலும், அதேசமயம் ஆத்துமாக்களைப் பராமரிக்கின்ற பணியையும் செய்கிறபடியால் குடும்பத்திற்கு வெளியே, அவர்களுடைய உதவி தேவைப்படுகிறவர்களுக்கு நேசக்கரம் நீட்டும் அளவுக்கு தகுதி பெற்று விடுகின்றனர். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஒரு வாஞ்சையும் விருப்பமுமே கிறிஸ்துவத்தின் அதிமுக்கியமான அம்சமாகும்.

அப் 9:36:39வசனப் பகுதிகளில் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவ பெண்ணைப் பற்றி நாம் காணமுடியும், யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தம் கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள்.

அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணம் அடைந்த பொழுது, அவளைக் குளிப்பாட்டி மேல் வீட்டிலே வைத்திருந்தார்கள்.

யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.

பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப் போனார். அவர் போய்ச் சேர்ந்த பொழுது, அவர்கள் அவனை மேல் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து "அவனைச் சூழ்ந்து நின்றார்கள்"

சில சமயங்களில், கிறிஸ்தவப் பெண்கள் கர்த்தருக்காக சேவை செய்வதில் தாங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். பொதுவாக ஆண்கள்

கூடிவந்திருக்கும் பொழுது பெண்கள் தலைமை ஏற்பது அனுமதிக்கப்படாத ஒன்று என்று வேத வாக்கியத்தினால் நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள், பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது" (1 கொரிந்தியர் 14:34) ஸ்திரீகளுக்கான மேலும் ஒரு உபதேசத்தை 1 தீமோத்தேயு 2ம் அதிகாரம் 12 முதல் 14 வரை உள்ள வசனப்பகுதி இவ்வாறாக விளக்குகிறது. "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும் என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்."

வேதாகமம் இப்படி போதிக்கிறபடியால் பெண்கள் செய்யக்கூடிய வேலை எதுவுமே இல்லயென்பது இதன் பொருள் அல்ல. நற்கிரியைகளையும், தான தருமங்களையும் செய்துவந்த ஒரு சிறந்த பெண்மணி என வேதாகமம் தொற்காளை விவரித்துச் சொல்கிறது. அவள் மரித்துப் போன செய்தியைக் கேட்டு பேதுரு அங்கு வந்து சேர்ந்தபொழுது, கூடியிருந்த விதவைகள் தொற்காள், தங்களுடனே கூட இருக்கையில் தைத்துக் கொடுத்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்தார்கள்.

துணிகளை தைத்து இல்லாதவர்கட்கு கொடுப்பதில் தொற்காளின் திறமை வெளிப்படையாகவே தெரிகிறது. சபையிலே குறைவிலும், தரித்திரத்திலும் இருந்த விதவைகளைக் கண்டபோது தன்னிடத்திலுள்ளதைக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்தாள்.

இந்த அர்த்தத்தை மனதில் வைத்துத்தான் மத் 25:14-30 -ல் தாலந்தைக் குறித்தான உவமையைக் கிறிஸ்து சொல்கிறார். ஒவ்வொரு மனிதனும் சில தனிப்பட்ட தாலந்துகளினால் ஆசீர்விக்கப்பட்டிருக்கிறான். சிலருக்கு மற்றவர்களைவிட கூடுதலாக ஆசீர்வாதங்கள் உண்டு என்று சொல்கிறார். தேவன் கொடுத்துள்ள தாலந்துகளை நாம் உபயோகிக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். நாம் அவ்வாறு செய்யும் பொழுது தேவன் நம்முடைய தாலந்துகளோடு இன்னுமதிகமான ஆசீர்வாதங்களை சேர்த்து, நம் வாழ்நாட்காலத்தில் இன்னும் அதிகமான நன்மை செய்கிற மக்களாக நம்மை மாற்றுவார்.

சிலர் ஒருவேளை மருத்துவத்துறையில் பயிற்சி பெற்று டாக்டர்களாகவும், தாதிகளாகவும் இருப்பவர்கள். தங்கள் திறமையை தொழில் ரீதியாக மட்டும் காட்டாமல் சகோதரிகளுக்குள் வியாதியாயிருப்பவர்களுக்கு ஒரு கிறிஸ்துவ சேவை, அல்லது உதவி புரிந்து தங்கள் திறனை பயன்படுத்தலாம். ஒரு குடும்பத்தில் தாய்க்கு உடல்நலமில்லையென்று வைத்துக் கொள்வோம் கிறிஸ்தவ சகோதரிகளின் குடும்பத்தில், குடும்பத்தாருக்கு உணவு சமைத்தல், வீட்டைச் சுத்தம் செய்தல், துவைத்தல், குழந்தைகளை பராமரித்தல் போன்ற உதவிகளைச் செய்யலாம். வயோதியர்களுக்கும், நோயாளிகளுக்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் தாம் நேரில் சென்று விசாரித்து வரலாம். மேலும் வயதானவர்களுக்கும், வாசிக்க முடியாதவர்களுக்கும் நாம் வேதத்தைப் படித்துக்காட்டி தேவனுடைய காரியங்களை விளக்கிக்காட்டலாம்.

வாலிப சகோதரிகளை சபையின் காரியங்களில் பங்கு கொள்ளும் வகையில், திட்டங்கள் தீட்டும் வேலையை பெண்களும் தாய்மார்களும் சேர்ந்து செய்யலாம் ஒவ்வொரு குடும்பத்தையும் உண்மையான அன்புக்கும், விருந்தோம்பலுக்கும் ஏற்ற இடமாக பெண்களால் மாற்ற முடியும். கிறிஸ்துவை அறியாதவர்கட்கும் அவ்வன்பை அனுபவிக்கும்படியாகச் செய்ய முடியும். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் தொற்காளைப் போல நம்முடைய தாலந்துகளை உபயோகிக்க திறமைகளையும் வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறோம். அவைகளை தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படுத்த தேவன் நமக்கு உதவி செய்வாராக!

BETTY CHOATE

RACHEL NAYAGAM

## ஜெப வேண்டுகோள்

காங்கயம் கிறிஸ்துவின் சபையாராகிய நாங்கள் சபை கூடி வரும்படியாகக் கட்டும் கட்டிடப் பணி, சிறப்பான முறையில் நடந்தேற ஊக்கமாய் ஜெபிக்க வேண்டுகிறோம்.

நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக் 5:16)

# சிலுவை வார்த்தை

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. (1 கொரி 1:18)

சிலுவை வசனமாகிய கிறிஸ்துவின் சுவிசேஷம், மிகவும் வல்லமை நிறைந்த செய்தியாகவும், தேவபெலன் நிறைந்த செய்தியாகவும் இருக்கிறது. (ரோம 1:16). சுவிசேஷத்தின் ஒட்டுமொத்த செய்திக்கு வழியை ஆயத்தம் பண்ண இயேசுவும், அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட சீடர்களும் மூன்று வருடங்கள் சுற்றித் திரிந்து பாடுபட்டார்கள். அதற்கு முன்பே, யோவான் ஸ்நானகன் வரப்போகிற மேசியாவுக்காக, சுற்றித் திரிந்து இஸ்ரவேல் மக்களை ஆயத்தம் செய்தார் மேசியாவாகிய, கிறிஸ்துவின் உபதேசங்களை சொந்த ஜனமாகிய இஸ்ரவேலர் பெரும்பாலும் நிராகரித்தார்கள். (யோவா 1:11). அவர்கள் அவரைக் காட்டிக் கொடுப்பவர்களாகவும், கொலைக்கு ஒப்புக் கொடுப்பவர்களாகவும் ஆனார்கள்.

கிறிஸ்துவின் விரோதிகளும், எதிரிகளும், கல்வாரியோடு கிறிஸ்துவையும், அவருடைய உபதேசங்களையும் அமைதியாகும்படி செய்து விட்டோம் என நினைத்தனர். ஆகவே தான், அந்த வழியாய் நடந்து போகிறவர்கள், தங்கள் தலைகளைத் துலுக்கி, ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்து இறங்கி வா என நிந்தித்தனர். (மாற் 15:29, 30). உண்மையாகவே அவரை சத்தம் இல்லாமல் செய்து விட்டோம் என நினைத்தனர். அவர்கள் நினைத்தது எவ்வளவு தவறு! அவரை ஒரு ஏமாற்றுக்காரனாக நினைத்ததே காரணம். இஸ்ரவேலர் ஒரு "வெற்றியுள்ள தலைவனை" எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். உலகமானது சிலுவை வார்த்தைக்காக, ஆயத்தமான நிலையிலும், சரியான தருணத்திலும் இருந்தது. (கால 4:4, 5). வெற்றித் தலைவனுக்குப் பதிலாக, யூதர்களுக்கும் எஞ்சிய உலகத்தாருக்கும் ஒரு இரட்சகர் தேவைப்பட்டார். கல்வாரியில் சிலுவை வார்த்தை அமைதியாக்கப் பட்டது. ஆனால் அது தற்காலிகமாகத்தான்.

கல்வாரியிலிருந்து, எண்ணி ஐம்பது நாட்களுக்குப் பிறகு, பெந்தெகோஸ்தே நாளில், சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவி (யோவா 16:13) "பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல" வானத்திலிருந்து இறங்கி வந்து, சிலுவையின் வல்லமையான வார்த்தையைக் கொண்டு வந்தது (அப் 1:8: 2:1-4) கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட பேதுரு (மத் 16;18, 19), நற்செய்தியைப் பிரசங்கித்து, மூவாயிரம் ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் கொண்டு வந்து சிலுவையின் வார்த்தையை வெளிப்படுத்தினார். (அப் 2:14, 44). அப்பொழுது நற்செய்தியைப் பிரசங்கித்த

வர்களைப் பயமுறுத்தி, சிறையிலடைத்து, நற்செய்தியை அடக்கிப்போட முயற்சி செய்தனர். (அப் 4:1-12). ஆனால் சிறைச்சாலையானது சிலுவை வார்த்தையைத் தாங்க முடியாமல் திணறியது. இந்த சமயத்தில், சிலுவை வார்த்தைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்த ஆண்களின் எண்ணிக்கை மாத்திரம் ஐயாயிரத்தை தொட்டுவிட்டது. (அப் 4:4). நற்செய்தி எருசலேமெங்கும பரவின பொழுது, திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடம் அதிக திகமாகச் சேர்க்கப்பட்டார்கள் (அப் 5:14).

மீண்டும் அப்போஸ்தலர்கள் சிறையலிடைக்கப்பட்ட போதும் சிலுவை வார்த்தையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மிகக் குறுகிய காலத்தில் தேவனுடைய வார்த்தையானது அபரிவிதமாய் பெருகுகிறது. "சீடர்களுடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று" (அப் 6:7). தேவனுடைய வார்த்தையானது இப்பொழுது நகரத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது. எருசலேமைச் சுற்றியிருந்த கல் மதில்கள், நற்செய்தியைத் தாங்கக் கூடாமல் சரிந்தது. (அப் 1:8).

சிலுவை வார்த்தையை அடக்க முடியாததைக் கண்ட யூதர்கள், சபைக்கு எதிராக மிகப்பெரிய துன்புறுத்தலை ஏவிவிட்டு, கிறிஸ்துவைப் பின் பற்றினவர்கள் சிதறிப்போகும் படியாகச் செய்தார்கள் (அப் 8:1) யூதர்கள் இந்த அடக்குமுறையின் மூலம், நற்செய்தியை அடக்கிப் போடலாம் என நினைத்தனர். எவ்வளவு முட்டாள்தனமானது! சிலுவையின் வார்த்தை காட்டுத் தீ போல் வேகமாகப் பரவுவதற்கு தாங்கள் உதவி செய்கிறோம் என்று உணராதிருந்தார்கள் (அப் 8:4) இப்பொழுது, செய்தியானது அவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சமாரியர்களுக்கும் சென்றடைந்தது.

அடக்குமுறை, துன்புறுத்தல் இவைகளுக்குப் பிறகு எருசலேமில் மீந்திருந்த அப்போஸ்தலர்கள், காரியங்கள் எப்படி போய்க் கொண்டிருக்கின்றன என்று அறிய விரும்பினர். பேதுருவையும், யோவானையும் விவரம் சேகரிக்க சமாரியாவுக்கு அனுப்பினர். இந்த இருவரும் காரியங்கள் உண்மைதானென்று அறிந்து சமாரியாவிலிருந்த பொழுது அநேக கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை பிரசங்கித்தனர் (அப் 8:25). இப்பொழுது நற்செய்தி யூதேயா, சமாரியா எங்கிலும் பரவிற்று. இந்த பிராந்தியங்களின் எல்லைகளெல்லாம் சிலுவை வார்த்தையின் வல்லமையைத் தாங்க முடியாமல், கடந்து போகும்படி தானாக வழிவிட்டன."பூமியின் கடைசி பரியந்தமும்" சிலுவை வார்த்தை செல்லக் கூடிய தருணம் வந்துவிட்டது (அப் 1:8).

மறுபடியும் பேதுரு நற்செய்தியை அறிவிக்கக் கூடிய சிலாக்கியத்தைப் பெறுகிறார். ஆனால் இப்பொழுது புறவினத்தாருக்கு. அந்தக் கால கட்டத்தில் இது நினைத்துப் பார்க்க முடியாதது. நற்செய்தி மாந்தர் யாவருக்கும் பொதுவானது என்று, பேதுருவுக்கு தேவன் மூன்று முறை வெளிப்படுத்தினார். (அப் 10:1-16). கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு புறவினத்தாருக்கும் தான் என்பதை யூதர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கொர்நெலியுவுக்கும், அவன் வீட்டாருக்கும்

நற்செய்தியை அறிவித்து எருசலேம் திரும்பினபோது, யூதர்கள், பேதுரு விடம் வாக்கு வாதம் செய்தனர். பிறகு, நம்மால் ஒதுக்கப்படும் புறவி னத்தார் எப்படி சிலுவை வார்த்தையாகிய நற்செய்தியைக் கேட்டு ஏற்றுக் கொண்டார்கள் என்பதை பேதுரு, வருணித்தபோது அதைக் கேட்டு தேவனை மகிமைப்படுத்தினர்.

ஒரு காலத்தில் சபையைத் துன்பப்படுத்தி, கிறிஸ்தவர்களை சிறையிட்டு, அவர்களை கொலை செய்வதற்கும் அஞ்சாமல் ஒப்புக் கொடுத்த அப்போஸ்தலனாகிய பவுல், சிலுவை வார்த்தையை உலகின் கடைசி பாகத்திற்கும் கொண்டு செல்லும்படியாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார். அவருடைய பெரும் முயற்சியால் நற்செய்தி உலகெங்கும் பிரசங்கிக்கப்பட்டது. அநேக ஆத்துமாக்கள் கர்த்தரிடமாய் திருப்பப்பட்டார்கள். ரோம சாம்ராஜ்யம் முழுவதும் சபைகள் ஸ்தாபிக் கப்பட்டன. பவுலின் வாழ்நாட் காலத்தில் சுவிசேஷம் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு சென்றடைந்தது. (கொலோ 1:16, 23). சிலுவை வார்த்தை எங்கெல்லாம் சென்றதோ அங்கெல்லாம் விசுவாசமில்லாத யூதர்களால் எதிர்ப்பும் இருக்கவே செய்தது. நற்செய்தியை அறிந்த வர்களை, இந்த வணங்காக் கழுத்துள்ள சந்ததியினர், கொலை செய்து, வெற்றியும் கூடப்பெற்றார்கள். ஆனால் சிலுவையின் வார்த்தையை அவர்கள் ஒன்றும் செய்துவிட முடியவில்லை என்பது சரித்திரம் காட்டும் உண்மை.

நண்பர்களே, அடுத்த தலைமுறை தோன்றி, சிலுவை வார்த்தையை கேட்டு பயனடையுமுன், நமது காலத்தில் அது அமைதியாகி விடுமா? நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? தங்கள் திறமை, தந்திரம், அறிவு, ஆத்திரம் இப்படி அனைத்தையும் சேர்த்து முழுமூச்சாக முயன்று யூதர்களால் முடியாமல் போனதை நமது அக்கறையின்மை யினால், அவபக்தியினால் நிறைவேற்ற உள்ளோமா? முதல் நூற்றாண்டில் சத்தியம் பிரசங்கிக்கப்பட்ட வேகமும், வசனத்தின் மீது தாகமும், அழியும் ஆத்துமாக்களின் மீது பாரமும், கர்த்தருடைய காரியத்தில் வைராக்கியமும் இல்லையெனில் இது நடக்கக்கூடியதே. கெட்டுப் போகிறவர்களுக்கு சிலுவை வார்த்தை பைத்தியமாகத் தோன்றினாலும், இழந்து போன ஆத்துமாக்களை மீட்பதற்கு இது ஒன்றுதான் இன்றும் தேவ பெலனாக உள்ளது. இந்த மாபெரும் வாய்ப்பு மனுக்குலத்துக்கு கடந்த 2000 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட் டுள்ளது. சத்தியம் அறிந்த நீங்களும், நானும் மௌனவிரதம் காப்போ மானால், யார் இதைச் செய்ய முன்வருவார்கள் நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப். பிரசங்கியுங்கள் (மாற் 16:15) என அர்த்தமுள்ள சிலுவை வார்த்தை ஆணையிட்டுச் சொல்கிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் இப்பணியைச் செய்தார்கள். நாமும் அவ்வண்ணமே செய்ய தீர்மானித்து, செயல்படுவோம் ஆத்தும ஆதாயம் செய்வோம். ஆசீர்வாதம் பெறுவோம்.

ஜேம்ஸ் ரிக்காடு — E.Z.S. ராஜநாயகம்

# பாட்டு

கிறிஸ்துவ மார்க்கத்தில் பாடல்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பாடல் ஒரு பகுதி யாகும். ஆராதனையின் அதி முக்கிய பங்கை வகிக்கும் இதைப் பற்றி இந்த சுருக்கமான பாடத்தில் கவனமாகப் பார்ப்போம்.

முதலாவதாக, பாடல்கள் சம்பந்தப்பட்ட சுவிசேஷ வசனங் களை பலவற்றை நாம் கவனிக்க விரும்புகிறோம்.

1. " அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்புமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மத்தேயு 26:30)
2. "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடி னார்கள், காவலில் வைக்கப் பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்"
3. " புறஜாதியாரும் இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப் . படுத்துகிறார்க ளென்றும் சொல்லுகிறேன். அந்தப்படி இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்மு டைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது" ரோமர் (15:9)
4. "நான் ஆவியோடும் பாடு வேன், கருத்தோடும் பாடு வேன்" (I கொரி 14:15)
5. "சங்கீதங்களினாலும் கீர்த் தனைகளினாலும் ஞானப் பாட்டுக்களினாலும் ஒருவ ருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி .."( எபே :5:19)
6. "கிறிஸ்துவின் வசனம் உங்க ளுக்குள்ளே சகல ஞானத் தோடும் பரிபூரணமாக வாச மாயிருப்பதாக; சங்கீதங்களி னாலும் கீர்த்தனைகளினா லும் ஞானப்பாட்டுகளி னாலும் ஒருவருக் கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத் திலே கர்த்தரை பக்தியுடன் பாடி; " (கொலோசெயர் 3 : 16).
7. "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் . . . " (எபி. 2 : 12).
8. "உங்களில் ஒருவன் துன்பப் பட்டால் ஜெபம் பண்ணக் கடவன்; ஒருவன் மகிழ்ச்சியா யிருந்தால், சங்கீதம் பாடக் கடவன்." (யாக்கோபு 5 : 13).
9. " ... புதிய பாட்டைப் பாடி னார்கள்." (வெளி. 5 : 10).
10. "அவர்கள் சிங்காசனத் திற்கு முன்பாகவும், நான்கு

ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள் . . ." (வெளி. 14 : 3).

*11.* "அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக் குட்டியானவருடைய பாட்டையும் பாடி . . . ." (வெளி. 15 : 3).

புதிய ஏற்பாட்டின் பக்கங்கள் அனைத்திலும் மேலே குறிப்பிட்டவைகள் மட்டுமே பாடல் சம்பந்தப்பட்ட வசனங்கள் ஆகும். இது சம்பந்தமாக இவ்வசனங்களின் மூலம் கர்த்தர் என்ன விரும்புகிறார் என்பது தெள்ளத் தெளிவாகக் காணப்படுகிறது. இதில் கூறப்பட்டவைகளுக்கு அதிகமாக அல்லது குறைவாகப் போனால், அவருடைய வசனத்திற்கு ஏற்புடையதாக இருக்காது.

இன்றைய மத உலகில், பல மக்கள் பாடல் என்றால் இசை என்றும், இசை என்றால் வாத்தியக் கருவியின் இசை என்றும் கருதுகின்றனர். ஆகவே தான், பல மதக்குழுக்கள் தங்கள் பாட்டுக்களோடு வாத்திய இசைக் கருவிகளையும் இணைத்துள்ளனர். ஆனால், நமது ஆராதனையில் பாட்டுகள் பாடவேண்டுமென புதிய ஏற்பாடு கற்பிக்கிறதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில், இசைக் கருவிகளுடன் இசைந்து பாடுவதை ஆராதனைகளில் அனுமதிப்பதை சகலரும் ஏற்றுக் கொள்ள இயலாது. இதைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது? பாட்டு மட்டும் எனக் கூறுகிறதா அல்லது ஆராதனையில் இசைக் கருவிகளையும் உபயோகிக்க வேண்டும் என சொல்லுகிறதா? இசைக் கருவிகளின் உதவியின்றி ஆராதிக்க இயலுமா? அல்லது அவற்றின் உதவியோடு ஆராதிக்க வேண்டுமா? அல்லது இரண்டில் ஏதாவது ஒன்றைக் கடைபிடிக்கலாமா? நாம் இவற்றிற்கான விடையைக் காண்போம்.

வாய்ப்பாட்டு, வாத்தியக் கருவி இசை என இருவகை இசைகளை மனிதன் அறிவான். வாய்ப்பாட்டு ஒரு மனிதனின் குரல் நாளங்களிலிருந்து உண்டாகிறது. எனவே தனிப்பட்ட மனிதனுக்குள்ளிருந்து புறப்படும் அது ஜீவனுள்ளதாக இருக்கிறது. தேவனுடைய சொந்தப் படைப்பிலிருந்து அது வருகிறது. எனவே, மனிதனுடைய குரலில் இருந்து வரும் சத்தங்களால் உருவாகும் இசையே உலகத்திலுள்ள சகல இசைகளிலும் மிகவும் அழகானதாகக் கருதப்படுகிறது. கருவிகளைக் கொண்டு மீட்டும் இசையானது இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. அது கருவிகளால் உண்டானது. இசைக் கருவி மனிதனால் உண்டாக்கப்பட்டுள்ளது. அது உணர்ச்சியற்றது, உயிரற்றது,

உற்சாகமற்றது, இதயமற்றது. யாரோ ஒரு மனிதன் அதை இசைப்பதால் மட்டுமே அது சத்தம் உண்டாக்குகிறது. தேவன் அதை அப்படியாக உண்டாக்க வில்லை. ஆனால் அது மனித னின் ஒரு கண்டுபிடிப்பு. அது ஒரு மாற்று. இப்போது தேவன் எதில் பிரியப்படுவார்? "ஆகை யால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலியை அவர் மூலமாக எப்போதும் தேவனுக் குச் செலுத்தக் கடவோம்" என எபிரேய எழுத்தர் கூறுகிறார். (எபி. 13 : 15).

கடந்த காலத்தில் உள்ள புகழ் பெற்ற மதத்தலைவர்கள் வேதா கமம் கற்பிக்கிறதைப் போல வாய்ப்பாட்டை மட்டுமே ஆதரித் தார்களே தவிர, ஆராதனைகளில் வாத்திய இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதை ஆதரிக்க வில்லை. அவர்களில் சிலருடைய அறிக்கைகளைக் காண்போம் :

1. ஜான் வெஸ்லி : "நமது ஆராதனைக் கூடங்களில் வாத்திய இசைக் கருவிகள் ஒலிப் பதும் காணப்படுவதும் தவிர்க்கப் பட்டால், நான் அவைகளுக்கு ஒன்றும் எதிரியல்ல." (Clark's Commentary, Vol. IV., P. 686).

2. ஜான் கால்வின்: "தேவனை ஆராதிக்கும் சடங்கு களில் வாசனை பத்திகள், மெழுகு வர்த்திகள் ஆகியவற்றை கொளுத்தி வைப்பது, இன்னும் நியாயப் பிரமாணத்தின் சில சடங்குகளை மீண்டும் செய்வது எவ்வாறு சரியாக இருக்காதோ, அதே போல வாத்திய இசைக் கருவிகளை இசைப்பதும் சரி யல்ல. எனவே, இவைகளையும், இவை போன்ற இன்னும் பல காரியங்களையும் யூதர்களிடமி ருந்து பாப்டிஸ்ட்டுகள் முட்டாள்த் தனமாக கடனாகப் பெற்றுள் ளனர்." (John Calvin's Commentary, Thirty-third Psalm).

3. மார்ட்டின் லூதர்; "ஆர்மோனியம் பாகாலின் ஒரு சின்னம்" என அவர் அழைத்தார். (Mc Clintock and Strong's Encyclopedia, Music, Vol. VI., P 762).

4. ஆதம் கிளார்க் : "ஒரு கலை என்ற ரீதியில் இசையை நான் மிகவும் மதிக்கிறேன், வியக் கிறேன்; ஆனால் தேவனுடைய வீட்டிலே இசைக் கருவிகளை உபயோகிப்பதை நான் வெறுக் கிறேன், அருவருப்படைகிறேன். இது இசையை தவறாக பயன்ப டுத்துவதாகும்; கிறிஸ்தவத்தின் காரணகர்த்தரை ஆராதிப்பதில் காணப்படும் எல்லா ஊழல்க ளுக்கும் எதிராக என் எதிர்ப்பை பதிவு செய்கிறேன்." (Clark's Commentary, Vol. IV.P. 686).

ஆராதனையில் வாத்தியக் கருவிகளை உபயோகிப்பதற்கு எதிராக இன்னும் பல வேதாகம அறிஞர்கள் இதுபோன்று பேசியி

ருக்கின்றனர். ஆனால் இதெல்லாம் எங்கே ஆரம்பமாயிற்று? கத்தோலிக்க சபையிலும் பின்னர் அதிலிருந்து பிரிந்தவர்களும் தங்களோடு இசைக் கருவிகளையும் கொண்டு வந்தனர்.

பல நாமகரண மக்கள் வாத்திய கருவிகளுடன் இசைந்து பாடுவதை நியாயப்படுத்தி கீழ்க் கண்டவற்றைக் கூறி முயற்சி செய்கின்றனர்.

தாவீது இதை உபயோகித்தான் என அவர்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் தாவீது நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தான்; நாமோ வேறு சட்டத்தின் கீழ் வாழ்கிறோம். தாவீது செய்தான் என்பதற்காக மட்டும் நாமும் அவ்வாறே செய்ய வேண்டியதில்லை. அப்படித் தான் செய்ய வேண்டும் என்றால், எருசலேமுக்கு மிருக பலி செலுத்த வருடத்திற்கு ஒரு முறை நாம் செல்ல வேண்டியதிருக்கும். வாத்தியக் கருவிகளை இசைப்பதில் தாவீதை முன்னுதாரணமாகக் காட்டுவோர், எருசலேமுக்கு வருடந்தோறும் செல்லவும், ஒருவேளை இது போன்ற இன்னும் வேறு காரியங்களைச் செய்யவும், தயாராக இருக்க வேண்டும். ஆனால் தாவீது செய்த சகலவற்றையும் செய்ய அவர்கள் தயாராக இல்லை. யோவான் 1 : 17; 2 கொரி 3; எபிரேயர் 10 :9 ஆகிய வசனங்களை படியுங்கள்.

2. வாத்தியக் கருவிகளை உபயோகிக்கக் கூடாது என வேதாகமம் கூறவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் ஆராதனையில் நிறைய காரியங்களைச் செய்யக்கூடாது என்றும் அது சொல்லவில்லை. என்றபோதிலும் எதைச் செய்ய வேண்டுமென்று அது சொல்லுகிறது; அதாவது பாட வேண்டுமென அது சொல்லுகிறது. (எபே.5 : 19). பிறவற்றை அது நீக்கிப்போடுகிறது.

3. அது ஒன்றும் தவறல்ல என அவர்கள் கூறுகின்றனர். வீடுகளில், திருமணங்களில் இன்னும் பொழுது போக்காக இசைக் கருவிகளை உபயோகிப்பதில் தவறு எதுவும் இல்லாதிருக்கலாம். ஆனால் ஆராதனை என்பது வேறு. கர்த்தர் கட்டளையிடாதபோது ஆராதனையில் அதைச் சேர்ப்பது தவறாகும். (வெளி. 22 : 18, 19).

4. நமது ஆராதனைக்கு அது உதவியாக இருக்கிறது. என்று அவர்கள் கூறுகின்றனர். அப்படியானால் நமது கர்த்தர் ஏன் அதைக் கட்டளையிடவில்லை? ஏனெனில் அதை உபயோகிப்பது உதவியாக இல்லாமல், உண்மையில் அது ஆராதனையில் ஒரு அங்கமாகி விடுவதால் கட்டளையிடப்படவில்லை.

இது சுவிசேஷத்திற்கு ஏற்புடைய தல்ல.

5. பரலோகத்தில் இசை இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். வாத்தியக் கருவிக ளுடன் பரலோகத்தில் இசை இருப்பதாக சுவிசேஷம் உபதே சிக்கவில்லை. அப்படியே அது சொன்னாலும்கூட ஆராத னையில் அதை உபயோகிப்பதை நியாயப்படுத்தாது. பரலோகத்தில் அநேக காரியங்கள் இருக்கும் அவற்றையெல்லாம் நாம் ஆராத னையில் இங்கு செய்ய முடியாது.

6. அவர்கள் அதை விரும்புவ தாகக் கூறுகின்றனர். நல்லது, நான் கேக், குளிர்பானங்கள் ஆகியவற்றை விரும்புகிறேன். எனவே அவற்றை ஆராத னையில் வைத்துக் கொள்ள முடியுமா? நாம் விரும்புகிறோமா இல்லையா என்பதல்ல; ஆனால் கர்த்தர் அதை விரும்புகிறாரா என்பதே கேள்வி.

எனவே, கர்த்தரின் நாளில் நாம் ஆராதனைக்குக் கூடி வரும் போது நமது வாய்ப்பாட்டினால் நாம் கர்த்தரை மகிமைபடுத் துவோம். ஆவியோடும் உண்மை யோடும் இதைச் செய்ய வேண்டும். ஆகவே, நாம் கருத் தோடும் சகல நேர்மையுடனும் பாட வேண்டும். சுவிசேஷத்தில் கூறப்பட்ட படியும் நாம் பாட வேண்டும்; அதாவது கர்த்தரை வாயால் புகழ்ந்து பாடவேண்டும்.

அது மட்டுமல்ல, பாடல்கள் சுவிசேஷத்தின் படியாகவும் ஆவிக்குரிய விதத்திலும் அமைந் திருக்க வேண்டும்.

பிராந்திய சபை கூடி பாட வேண்டுமென வேதாகமம் கற்பிக்கிறது. அதாவது சங்கீதங்க ளையும், பாடல்களையும், கீர்த்த னைகளையும் நமது குரல்களால் இசைக்க வேண்டுமென்று கூறு கிறது. இந்தப்பாடல்கள் மூலமாக நாம் தேவனை புகழுகிறோம், ஒருவருக்கொருவர் உபதேசிக் கிறோம், கர்த்தரிடம் விசுவா சமாக இருக்க ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்துகிறோம்.

கருவிகளின் சத்தங்களும் இடையூறுகளும் இன்றி, ஆனால் கனத்தோடும் சமாதானத்தோடும் சாந்தமான இதயத்தோடும் பரலோகத்தின் தேவனை நோக்கி நாம் சேர்ந்து நமது குரலை எழுப்பி, வாயினால் இப்படிப் பட்ட பாடல்களை இனிமையாக பாடுவது எவ்வளவு அருமையாக இருக்கிறது! இதைவிட அதிகப் பொருத்தமானது என்ன இருக்க முடியும்? இதைவிட உணர்ச்சி பூர்வமானது என்ன இருக்க முடியும்? இதையே தேவன் விரும் புகிறார்.

**J.C. சோட்**

# நீ ஏன் சந்தேகப்பட்டாய்?

பலர் இன்று சந்தேகப்படு கின்றனர் தேவன் இருக்கிறார் என்பதே அவர்களுக்கு கிண்ட லான செய்தி. அவருடைய வசனம் அவர்களுக்குக் கேள்விக் குறி. மதத்திற்கெல்லாம் 'மேலான வர்கள்' எனத் தங்களை எண்ணிக் கொள்ளும் இவர்கள், இவ்வுலகத்திற்கு மட்டுமே உரிய வர்கள். கட்டுக் கதைகளின் தொகுப்பே வேதாகமம் எனக் கூறுகின்றனர். வேதாகமத்தை விசுவாசிப்பவர்களோ இவர்கள் பார்வையில் பின் தங்கியவர்கள், குருட்டு நம்பிக்கையுடையவர்கள், அறியாமையில் ஆழ்ந்து கிடப்ப வர்கள். ஆனால் இந்த நாஸ்திகர் களும், நம்பிக்கையற்றவர்களும், பரிணாம வளர்ச்சியின் பாதுகா வலர்களும், நவீன காலத்தவர் களும் இன்னும் இவர்களைப் பின்பற்றும் கூட்டத்தார் எல்லா ரும் தரப்போவது என்ன? வாதங்கள், தத்துவங்கள், உண்மை யற்ற வரட்டுப் பேச்சுக்கள், இவற்றைத் தவிர வேறு எதைத் தரப்போகின்றனர்? தேவனுடைய சிருஷ்டிப்பை நிருபிக்க எல்லா சாட்சியங்களும் உண்டு. அவரு டைய வசனங்களும், மற்றும் நாம் காணும் சகல காரியங்களிலும் தேவன் இருப்பதை நிருபிக் கின்றன, உறுதிப்படுத்துகின்றன. அவர் தமது வாக்கைக் காப்பாற் றுவது உண்மை, உறுதி.

பல மத போதகர்கள் கூட கர்த் தரின் அதிகாரத்தை மதிப்ப தில்லை. அவருடைய வார்த் தையை பெரிதாக எடுத்துக் கொள்ளுவதில்லை. கோடிக்க ணக்கான மக்களின் மனதிலே அவர்கள் சந்தேக விதையை ஊன்றிக் கொண்டிருக்கின்றனர். அநேக சபைகளைப் பற்றி அவர்கள் பேசுகின்றனர்; மோட் சத்திற்குப் பல வழிகள் உண்டு என்கிறார்கள்; பலவித ஆராத னைகள் உண்டு; பெயரில் ஒன்று மில்லை; வித்தியாசப்பட்ட விசு வாசங்கள், இன்னும் எதையெல் லாமோ சொல்லுகின்றனர். தேவன் எதையும் ஏற்றுக் கொள்வார் என்பது போன்ற அபிப்பிராயத்தை மக்களிடம் ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால் தேவன் பேசியிருக்கிறார்; அவர் சொன்னதைச் செய்கிறார் என்ற உண்மையை அவர்கள் கவனிப்ப தில்லை. நியாயத் தீர்ப்பு நாள் வரை காத்திருந்து இதைக் கண்டு பிடிக்க வேண்டிய பரிதாப நிலையில் அவர்கள் இருக்கின் றனர்.

தேவனுக்குக் கீழ்ப்படிய நிறைய நேரமிருக்கிறது என்றும், கீழ்ப்படியும் நிலைக்கு வராவிட் டாலும் கூட பாதகமில்லை, தேவன் நிச்சயமாக மன்னிப்பார் என்றும், மக்களை திசை திருப்பும்

பணியில் ஈடுபட்டுள்ள பலர் போதிக்கின்றனர். யாரையும் தண்டிக்க கர்த்தருக்கு உண்மை யாகவே விருப்பமில்லை; எனவே, கடைசியில் அவர் எல்லாரையும் இரட்சித்து விடுவார் என்று மனிதன் நம்பக் கூடிய வகையில் இவர்கள் போதிக்கின்றனர். எனவே, எதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்? இத்தகைய மனநிலை சந்தேகத்தையும் அவிசுவாசத் தையும் ஏற்படுத்துகிறது. தேவன் இது பற்றி பேசியிருக்கிறார்; அவருடைய வார்த்தையின்படி அவர் நடப்பார். "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கி னையைச் செலுத்தும் படிக்கு" (2 தெச. 1 : 7) கர்த்தர் வருவார் என பவுல் நமக்குக் கூறுகிறார். அந்த எச்சரிக்கையை சந்தே கிப்பது முட்டாள்தனம். வீழ்ந்து போவதில் தான் அது முடியும்.

சபையிலும் கூட சந்தேகமும் அவிசுவாசமும் நிறைந்து காணப் படுகின்றன. கர்த்தரை பலர் பெரிதாக நினைப்பதில்லை. எனவே அவர்களுடைய ஆத்து மாவைப் பற்றியும் அலட்சியமாக இருக்கின்றனர். பலர் ஆராதனை களில் கலந்து கொள்வதில்லை; கர்த்தர் கட்டளையிட்டபடி காணிக்கை செலுத்துவதில்லை; பொருள் ஈட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து, உலகத்தை நேசிக்கின்றனர். சபைக்குள்ளும் பதவிகளுக்காக பறந்து கொண்டி ருக்கின்றனர். பொதுவாக அன்றாட வாழ்வில் கிறிஸ்தவ நடவடிக்கைகளைக் கடைபிடிப்ப தில்லை. என்றாலும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளுகின்றனர். இப்படிப்பட் டவர்கள் தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகின்றனர். கர்த்தரிடம் விசுவாசமாக இருக்கும் அள விற்கு அவரை நம்பாவிட்டால், கர்த்தர் உன்னை இரட்சிப்பாரா? அப்படியானால் நீயும் பிறரும் அவரை விசுவாசிக்க வேண்டு மென அவர் ஏன் கேட்டுக் கொண்டார்? நீ செய்து கொண்டி ருப்பதை மீண்டும் சிந்தித்துப் பார்.

மீண்டும், கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தில் உறுதியற்று இருக்கவில்லை என்பதை இம் மக்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். கடந்த காலங்களிலே, அவர் வாக்களித்த படியே செய்து வந்துள்ளதைப் பற்றி எல்லாம் மீண்டும் படித்துப் பார்க்க வேண்டும். அவர் மீண்டும் வருவார் என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏற்கெனவே வராததால் இனி வரமாட்டார் என எண்ண வேண்டாம். நிறைய நாட்கள் இருக்கின்றது என்றும் எண்ணாதீர்கள். நம் மிடம் உள்ளதெல்லாம் இன்று

மட்டுமே. அவரைச் சந்திக்க நாம் இன்றே தயாராவோம்". விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16) எனக் கிறிஸ்து கூறினார்" ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனிதன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" (யா 1 : 6, 7) என யாக்கோபு கூறினார். சந்தேகப்படுகிறவர்கள் மற்றும் அவிசுவாசிகளுடைய முடிவு எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 21 : 8-ம் வசனத்தில் நாம் படிக்கிறோம் : "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்."

ஞானமுள்ளவன் விசுவாசிப்பான், கீழ்ப்படிவான், கர்த்தர் வரும்போது அவரைச் சந்திக்க இப்போதே தயாராக இருப்பான். நீ விசுவாசிக்கிறாயா? அப்படியானால், இன்றே கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருப்பாயா? அவர் வருகையில் உன் ஆத்துமா நல்லநிலையில் இருக்க, உன் வாழ்நாள் முழுவதும் அவருக்கு விசுவாசமாக இருப்பாயா?

மற்றும் நிச்சயமாக எல்லாரும் ஒரு நாள் விசுவாசிப்பார்கள்; சந்தேகிப்பவர்களும், பரியாசக்காரர்களும்கூட விசுவாசிப்பார்கள். ஆனால், இதுவே விசுவாசிக்க வேண்டிய நேரம். உங்கள் விசுவாசத்தைக் காட்ட வேண்டிய காலமும் சந்தர்ப்பமும் கனிந்திருக்கிற இந்த வேளையில், கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள். அவருக்கு விசுவாசமாக வாழ்ந்தால் பரலோகத்தில் அவரோடு வாழ அழைத்துக் கொள்வார்.

தமிழில் : S. S. ராஜன்.

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது

( I கொரி 1: 18 )

# யெகோவா சாட்சி (13)

**இவர்கள் தாங்கள் தான் உண்மையான சபை என்று உரிமை கொண்டாடுகிறார்கள்**

கடந்த இதழில் நாம் யெகோவா சாட்சிகள் தாங்கள் தான் உண்மையான சீஷர்கள் என்று உரிமை கொண்டாடுகிறார்கள் என்பது பற்றியும் மற்றும் சில காரியங்கள் குறித்தும் பார்த்தோம். ஆனால் வேதம் அவர்கள் உண்மையான சீஷர்களல்ல என்று தெளிவாய் விளக்குகிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு மதிப்பளிப்பதுமில்லை. அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு மதிப்பளிப்பதாயிருந்தால் இந்தச் சிறிய இதழில், பதிமூன்று கட்டுரைகள் இடம்பெற வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

மூன்றாவதாக, அவர்கள் உபதேசத்தால் தேவனின் (யெகோவாவின்) நாமத்தைக் கனப்படுத்துவதாக உரிமை கொண்டாடுகிறார்கள். இது சுத்தமாக பொய்யே தவிர வேறில்லை. அவர்கள் உண்மையில் யெகோவாவின் நாமத்தைக் கனப்படுத்துகிறவர்களாயிருந்தால், பழைய ஏற்பாட்டில் யெகோவா (பிதாவானவரின்) நாமமும், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவி (குமாரனி)ன் நாமமும் கனப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக அறிய வேண்டும்.

ஏனென்றால் அவர்( இயேசு) மூலமாகவே நாம் ஜீவன் பெறுகிறோம். மற்றும் ஜெபிக்கிறோம். (யோவான் 20:31, 14:13-14, 16:23-24) அவருடைய நாமத்தினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். (அப். 4:12) தேவன் அவரது நாமத்தை உயர்த்தியிருக்கிறார். பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுக் கிறிஸ்து, கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப் 2:5-11)

நான்காவதாக, யெகோவா சாட்சிகள், தேவனுடைய ராஜ்யம் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே ஸ்தாபிக்கப்பட்டதாகப் போதிக்கிறார்கள். இது உண்மையான மார்க்கத்திலுள்ளவர்களின் போதனையல்ல. அவர்கள் 19 ம் நூற்றாண்டில் பிரிந்து சென்ற நாமகரண கூட்டத்தாராயிருப்பதால் தான் இப்படி போதிக்கிறார்கள். முதல் நூற்றாண்டிலேயே பெந்தெகொஸ்தே நாளன்று தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது என்ற சத்தியத்தை இவர்கள் ஜீரணிக்க முடியாதவர்களாய் இருக்கிறார்கள். ராஜ்யத்தைக் குறித்த உபதேசத்தில் பரிசுத்த வேதாமமம் மிகவும் தெளிவாயிருக்கிறது. ரோம சாம்ராஜ்

யத்தின் நாட்களில் தான் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று தானியேல் கூறியிருக்கிறான். (தானி.2:44) ஏசாயாவும் கடைசி நாட்களில் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று கூறியிருக்கிறான். (ஏசா.2:2-4) இயேசுவானவர் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்தார் (மத். 4:17) இது அப்போஸ்தலர்களின் மரணத்துக்கு முன் ஸ்தாபிக்கப்பட வேண்டியதாயிருந்தது. (மாற்கு 9:1)இயேசு கிறிஸ்து பரமேறிச் சென்ற பின் பத்து நாள் கழித்து வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளிலே அப்போஸ்தலனாகிய பேதுரு (அப்.2:14-35) கர்த்தரின் ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்தார். (அப். 2:47. மத் 16:18-19) அந்த நாளில் 3,000 ஆத்துமாக்களை கொண்டு இது ஸ்தாபிக்கப்பட்டது (அப் 2:37 -41).

தேவன் தமது வேதத்தில் இவ்விதமாய் சொல்லியிருக்க, இவர்கள் (யெகோவா சாட்சிகள்) தங்களுடைய ஆழமான பொய்யைப் போதிக்க எவ்வளவு தைரியமுடையவர்களாய் இருக்க வேண்டும். இவர்களைப் பற்றி நான் நிறைய எழுதிக் கொண்டே இருக்க முடியும். ஆனால் உண்மையில் மற்ற விஷயங்கள் குறித்து நான் உங்களுக்கு ஆலோசனை கூறுவது அவசியத் தேவையாயிருப்பதால் யெகோவா சாட்சிகளாகிய என்னுடைய சிநேகிதர்களுடன் வாதாடுவதை இத்துடன் முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேதத்தைப் படித்து, உங்களால் முடிந்தால் இந்தக் கட்டுரைகளில் சொல்லப்பட்டவை தவறென்று நிரூபியுங்கள் அவ்வாறு நிரூபிப்பதற்கு வேதத்தில் ஒன்றும் கிடைக்காது என்பதை நான் அறிவேன். இதை உங்களுக்கு ஒரு சவாலாகவே நான் கூறுகிறேன். அன்பார்ந்த யெகோவா சாட்சிகள் என்ற (அ) விசுவாசிகளே, தயவுசெய்து வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ள அடிப்படை உபதேசங்களை மறுதலிக்கிற சாத்தானின் அமைப்பையே பற்றிக் கொண்டிருக்காதீர்கள். "காவல் கோபுர"த்தின் பொய்க் கதைகளைத் தூக்கி எறிந்து விட்டு சத்தியத்தை நோக்கி திரும்புங்கள் , நாம் இங்கு விளையாண்டு கொண்டிருக்கவில்லை. மாறாக நாம் இப்போது எடுக்கும் முடிவுகள் தான் நமது நித்திய (ஜீவனையோ) அல்லது ஆக்கினையையோ தீர்மானிப்பவையாக இருக்கின்றன.

நீங்கள் எங்களுடன் தொடர்பு கொள்வீர்களா?

(முற்றும்)

E.A. ஆறுமுகம்
திண்டுக்கல்

# நாம் விரும்புவதைப் போதிக்கலாமா?

"காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தினால் .. "(அப். 17:11)

முன்பு ஒரு காலத்தில் ஒரு ஊழியர் இருந்தார். (2 தீமோ 2:2) அவர் தேவனுடைய கட்டளைகளை மக்களுக்கு முழுவதுமாக அறிவிக்க ஒருபோதும் தயங்கியதில்லை (அப் 20:27) "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே"(கலா 3:27)என்பது அவர் கூறியவற்றில் ஒன்றாகும்.

ஒரு நாள் வெளியூரிலிருந்து அந்நகரத்திற்கு ஒரு போதகர் வந்தார். அங்கே, தனது கம்பீரமான குரலில் பல பாடல்களைப் பாடி, பெரிய கூட்டத்தைச் சேர்த்து விட்டார். பின்னர் அவர் போதிக்க ஆரம்பித்தார். "திருமுழுக்கு (ஞானஸ்நானம்) நமக்குத் தேவையில்லை (மத் 28 :19) திருமுழுக்கு பாவங்களுக்கு மன்னிப்பை அளிக்காது (அப் 2:28), திருமுழுக்கு நம்மை இரட்சிப்பதில்லை (1 பேதுரு 3:21) திருமுழுக்கு பாவங்களை கழுவாது.(அப் 22:16) திருமுழுக்கு யூதர்களுக்கு மட்டுமே உரியது (அப் 2:39) அல்லது ஆதி சபையாருக்கு மட்டுமே உள்ளது (மத் :28:20) எவரையும் புதிய வாழ்க்கையில் நடத்த திருமுழுக்கு உதவுவதில்லை (ரோமர் 6:3-4)"இப்படியாக அவர் போதித்து விட்டு, தொடர்ந்து, திருமுழுக்கு தேவையற்ற ஒரு இரட்சிப்பை தான் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதாகவும் அந்த போதகர் கூறினார். கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளும் இந்த புதிய ஆடை மிகவும் அழகும் அருமையானதுமாகும். "ஆவிக்குரிய அறிவு உணர்வு "உள்ளவர்களுக்கு இது ஒரு முழுக்கு அடையாளமாகும். அவர்களுக்குள் உள்ள கிருபையின் காரணமாக வெளியரங்கமான திருமுழுக்குப் போன்ற அடையாளம் தேவையில்லை என்றார்.

இந்த ஊழியருடைய பழைய பிரசங்கங்களைக் கேட்டிருந்த மக்களில் சிலர், இவருடைய புதிய செய்தியைக் (கலா 1:17) கேட்டு குழம்பிப் போனார்கள். மற்றும் பலரும் அவரை பின்பற்ற தொடங்கினார். (அப் 20:30) அவர் இப்போது ஒரு வித்தியாசமான செய்தியைப் போதித்துக் கொண்டு வந்த போதிலும், அவர்கள் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் (2 கொரி 11:4), கிறிஸ்துவின் அப்போஸ்

தலர்களை அவர்களுக்கு நினைப்பூட்டும் அளவிற்கு அவர் ஒரு நேர்மையும், ஆர்வமும் உள்ளவராகக் காட்சியளித்தார்! (2 கொரி. 11:13-15).

அந்த ஊழியரின் பிரசங்கத்தைக் கேட்க் மக்கள் கூட்டம் அலை மோதியது. ''ஆம், நாம் விசுவாசிக்கிறோம். எனவே கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டோம்" என்று அவர்கள் பெருங் கூச்சலிட்டனர். '' ஆவியின் அறிவு உணர்வு" பெற்றவர்கள் என தாங்களும் அறியப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.

ஒரு நாள் அந்த ஊழியர் போதித்துக் கொண்டிருந்த போது, பெரியா என்ற இடத்திலிருந்து வந்திருந்த ஒரு சாதாரண கிராமவாசியும் (அப். 17 : 11) அவருடைய'புதிய செய்தி''யைக் கேட்டான். திடுக்கிட்டுப் போன அவன், பக்கத்தில் நின்று கொண்டிருந்த மற்றொருவனிடம் சொன்னான் : ''ஊழியர் இப்படி போதிக்கிறார்; ஆனால் தேவன் வேறு விதமாகக் கூறுகிறாரே? ''உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலா. 3:27), என்றல்லவா கூறுகிறார் என பெரியா கிராமத்துவாசி சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்த சங்கதி விரைவில் அந்த மக்கள் கூட்டம் முழுவதும் பரவிற்று. அந்த ஊழியருடைய காதுகளுக்கும் அது எட்டியது. அப்போது தான், அவர் தன்னுடைய உண்மையான நிர்வாணத்தை உணரலானார். ஏனெனில், கிறிஸ்துவின் உபதேசத்தைப் போதிப்பதை விட்டு விட்டு, அவர் வெகு தூரத்திற்குப் போய்விட்டிருந்தார். (2 யோவான் 9). இயேசுவின் நாட்களில் இருந்த போதகர்களை அவர் நினைவு கூர்ந்தார். சாதாரண மக்களைப் போல் இல்லாமல், அவர்கள் யோவானால் ஞானஸ்நானம் பெறாமல் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள். (லூக்கா 7 : 29-30). தனது கர்த்தரை மறுதலித்த பேதுருவைப் போல, அந்த ஊழியர் ''வெளியே போய், மனங்கசந்து அழுதான்". (மத். 26 : 75)

''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும்." - யோவான் (12 : 48).

எஸ். எஸ். ராஜன்

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.[illegible] Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 1[illegible]49.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20 ஏப்ரல் - 1996
APRIL THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி.
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701